சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

புசா. 01 திரு. நெடுமாறன் த /பெ சுப்பிரமணி , வயது 57

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி .–**

2. எதிரி நடத்தி வரும் கடையில் நான் ஒரு பங்குதாரர் என்றால் சரியல்ல. நான் எப்போதும் எதிரியின் கடையில் பங்குதாரராக இருந்ததில்லை. எதிரி என்னிடம் பணம் பெற்றதற்கு ஆதரவாக பாண்டு ஏதேனும் எழுதிக்கொடுத்தாரா என்றால் இல்லை. எதிரிக்கு கடனாக கொடுத்த பணத்தை வசூல் செய்ய இவ்வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் பணத்தை கடனுக்கு கொடுக்கவில்லை, கைமாற்றாக கொடுத்தேன். அந்த பணத்தை வசூல் செய்யதான் நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் எதிரி நடத்தி வந்த பிளைவுட் கடையில் ஒரு பங்குதாரராக இருந்தேன் என்றாலும் பங்குதாரர் என்ற ரீதியில் எதிரி கொடுத்த பணத்தை நான் கேரளாவிற்கு சென்று கொடுத்துள்ளேன் என்றாலும் அந்த ரீதியாக எதிரியிடம் பெற்ற காசோலை வைத்து பொய்யாக இவ்வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Signature of Witness